**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**OS.No.44/2019**

**நாள்.10.02.2026**

**வா.சா.1- உத்திரசெல்வி**

**க/பெ - ஆனந்த்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. தாவா பி செடியூல் சொத்தானது பொதுப்பாதை என்றால் சரிதான். அந்த பொதுப்பாதையானது எங்களுடைய வீட்டோடு முடிவடைகிறது என்றால் சரிதான். அந்த பொதுப்பாதையை தற்சமயம் அரசு சிமெண்ட் கற்கள் போட்டு புதுப்பித்துள்ளது என்றால் சரிதான். எனது மாமியாரான 2ம் வாதி மீனாம்பாள் எரியோடு பேரூராட்சி தலைவர் பதவிக்கு போட்டியிட்டார் என்றால் சரிதான்.

2. அந்த நேரத்தில் பிரதிவாதி எனது மாமியாருக்கு ஆதரவாக ஓட்டு அளிக்கவில்லையென்பதால் 1 மற்றும் 2 வாதிகள் சேர்ந்து வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. தாவா பொதுப்பாதையை நாங்கள் பயன்படுத்துவதற்கு பிரதிவாதி இவ்வழக்கிற்கு முன்பும், பின்பும் எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யவில்லையென்றால் சரியல்ல.

3. என் மாமனார், மாமியார் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இந்த பொய் வழக்கிற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**